ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

OFFICE OF THE REGISTRAR
10 DEC 1924

புத்தகம் 7	இரத்தாட்சி௵ புரட்டாசி௴ 1924௵ அக்டோபர்௴	சஞ்சிகை 6.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

இளமையழகின் நிலையாமை.

" நாவி யகல மெழுதி நறுநுதலார்
ஆவி தளிர்ப்ப வவர்தோண்மேற் றுஞ்சினர்
தூவி யொழிபுள்ளிற் றோன்றித் துயருழப்பக்
காவிநெடுங் கண்புதைத் தாங்ககல்வர் நெஞ்சே."

(இ-ள்.) "நெஞ்சே! புழுகை மார்பினிடத்தே பூசி, நல்ல நெற்றியை யுடைய பெண்களின் ஆவிதழைக்கும்படி, அவர் தோள்மேலே படுத்துறங்கி இன்பத்தை அனுபவித்த வாலிபர்கள், அவ்விளமை நீங்கி விருத்தாப்பியமடைந்தபின்பு, பறத்தற்கேதுவாகிய இறகுகளின் கடைமயிர் கழிந்த பறவையைப் போல வலியற்றுத் தோன்றித் துன்பத்திற் சிக்கிவருந்த, அத்தருணத்தில், முன்னே அவரைக்கண்டு விரும்பிய பருவமங்கைய ரெல்லோரும், அவருடைய அழகற்ற நிலைமையைப் பார்த்து அருவருத்து அவ்விடத்தே, கருங்குவளை மலர்போன்ற நீண்ட கண்களை மூடிக்கொண்டு அவர்களை விட்டு நீங்கிச் செல்வார்கள்" என்பதாம்.

இளமையில் பருவமங்கைய ரெல்லோரும் தம்மைப் பார்த்து விரும்ப அவர்களோடு கூடி இன்பமனுபவித்த வாலிபர்கள் விருத்தாப்பிய தசையை அடைந்துவிட்டால், முன்னே அவர்மீது ஆசைகொண்டிருந்த அப்பெண்களே அவர்களைப் பார்த்து அருவருப்புக்கொண்டு அவர்களிடம் நெருங்காமல் நீங்குவார்கள். ஆதலின் இளமை இன்பம் நிலைத்ததன்று. இதனை யுணர்ந்து அந்த நிலையற்ற ஸ்திரீ யின்பத்தை விரும்பாமல் நிலைத்த பேரின்பத்தை அடைய முயற்சி செய்யவேண்டும். நாவி-புழுகு. அகலம்-மார்பு. தூவி-இறகு; பறவைகளுக்குக் கடையிறகுதான் பறத்தற் கனுகூலமாயிருப்பது; அஃதில்லாத பறவைகளால் பறக்கமுடியாது. காவி-கருங்குவளை.

(சீவகசிந்தாமணி 1575)

தருமசீலன்.

ரத்தாட்சி ௵ புரட்டாசி ௴.

"தூற்றும்பெண்டிர் கூற்றெனத் தகும்."

இதன் பொருள்:--"தூற்றும்-(தன்கணவன் குற்றங்களைப் பலரறியச் சொல்லி) எங்கும் பரப்பிவைக்கும், பெண்டிர்-மனையாட்டியை, கூற்று எனத்தகும்-(தன்கணவனைக் கொல்லும்) நமனென்று சொல்லல் தகுதியாகும்" என்பதாம்.

ஒருவனுக்கு மனைவியாக அமைந்தவள், தன் கணவனிடத்தில் பெருங்குற்றங்கள் காணப்படினும் அவற்றைப் பலரறியச் சொல்லித் தூற்றுதல் அவனுக்கிதமான வார்த்தைகளைச் சொல்லி நாளடைவில் அவனைத் திருத்த முயலவேண்டும்; அங்ஙனம் செய்தால் அவனிடமுள்ள குற்றங்கள் சிறிது சிறிதாக நீங்கிவிடும்; இல்லறத்தில் அமைதி ஏற்படும்; இல்வாழ்க்கையும் செவ்வனே நடைபெறும். அங்ஙனமின்றி, அம்மனைவி, தன் கணவன்செய்த சிறிது குற்றத்தையும் பலரறியச்சொல்லி எங்கும் பரப்பி விடுவாளாயின், அவனை உலகத்தார் நிந்திப்பார்கள். அந்நிந்தனையைக் கேட்டுக் கேட்டு அவனுக்குக் கோபம் அதிகரிக்கும்; அக்கோபத்தால் அவன் தற்கொலை செய்துகொள்ளத் துணிவான்; அல்லது மனைவியோடு தினந்தோறும் சண்டை தொடுப்பான்; அவள் எதிர்த்துப் பேசுவாள்; அதனால் அவனுக்கு மேலும் மேலும் கோபம் அதிகரிக்கும்; அக்கோபமிகுதியால் அவன் அவளை அடித்துத் துன்பப்படுத்துவான்" அத்துன்பத்தால் அவள் ஒருநாளைக்கு இறந்துவிடவுங்கூடும்; அவளுடைய மரணத்தால் அவனுக்கும் மரணதண்டனை கிடைத்துவிடும். இவ்வாறு புருஷனைத் தூற்றும் பெண்ணால் அவனுக்கு எந்த வழியினாலாவது மரணங்கிடைப்பது நிச்சயம். இதுபற்றியே ஔவையார், "தூற்றும் பெண்டீர் கூற்றெனத்தகும்" என்று இந்நீதியைக் கூறினர். இன்னும் திருக்குறளாசிரியரும்,

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்."

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை."

என்று கூறியிருக்கின்றார். ஆதலின், பெண்மக்கள் எல்லோரும் இந்நெறியைக் கடைப்பிடித் தொழுகி உய்வாராக.

(திருவருட்சகாயம்.)

21046/.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-5, பக்கம் 94)

(பதினோராவது ஸர்க்கம்)

அப்பால் கௌசிக முனிவர் தசரதரிடம் வந்து, தனது யாகத்தை இடையூறின்றி முடிப்பதற்காகக் * 'காகபக்ஷ'த்தைத் தரிக்கும் இராமனைத் தன்னோடு அனுப்புமாறு வேண்டிக்கொண்டார். சௌரியமுள்ளவர்களின் பாலியத்தைப்பற்றி யோசிக்கவேண்டியதில்லையன்றோ? உடனே வித்துவான்களோடு பழகும் வேந்தன், பிரயாசையினால் பெற்றிருந்தும், இராமனை இலக்ஷ்மணனோடு முனிவரைத் தொடர்ந்து செல்லுமாறு அனுப்பினான். இரகுவின் குலத்தில் இரவலர்கள் உயிரைக் கேட்டாலும் அவ்விருப்பம் நிறைவேறாமல் போவதில்லை. அரசன் தனது புதல்வர் செல்வதற்காக நகரத்திலுள்ள வழிகள் யாவற்றையும் தூசியில்லாமல் அலங்கரிக்கும்படி கட்டளையிட்டான். அதற்குள் வாயுவைத் தோழனாகப் பெற்ற மேகங்கள் புஷ்பங்களோடு மழைபெய்து அவ்வேலையைச் செய்துவிட்டன. தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதில் முயற்சியுள்ள அவ்வில்லாளிகள் இருவரும் தந்தையின் பாதங்களில் நமஸ்கரித்தனர். அப்பொழுது அரசனும் புதல்வரது பிரிவைப் பொறாமல் அவர்கள்மீது கண்ணீர்த்துளிகளை உதிர்த்தான். தந்தையின் கண்ணீரால் சிறிது நனைந்த கூந்தலையுடைய அவ்வில்லாளிகள் அம்முனிவரைப்பின் தொடர்ந்தனர்.' அப்பொழுது நகரவாசிகள் கும்பலாகச் சேர்ந்து அவர்களைப் பார்த்தனர். அதனால் வழியில் தோரணங்கள் கட்டப்பட்டது போலிருந்தது. முனிவர், இராமனோடு இலக்ஷ்மணனைமட்டும் துணைவனாக அனுப்பவேண்டுமென்று விரும்பினமையால் அரசன், சேனையை அனுப்பாமல் புதல்வரை ஆசிர்வதித்து அனுப்பினான். ஏனெனில், அவ்வாசியே அவர்களைக் காப்பதில் வல்லமையுள்ளது. தாய்மார்களின் பாதங்களில் நமஸ்கரித்து

---

* காகபக்ஷம் = சிஜுப்பாக்குமி,

விட்டு மகாமகிமையுள்ள முனிவர்சென்ற பாதையைப் பின்தொடர்ந்த அவ்வீரர்கள், சூரியனின் கதிவசத்தினால் பிரவிர்த்தித்த 'சித்திரை' 'வைகாசி' மாதங்களைப்போல் விளங்கினர்.

* கார்காலத்தில் 'உத்யம்' 'பித்யம்' என்னும் 'நத'ங்களின் சேஷ்டையைப்போல, அலைகள்போல் அலையும் கைகளையுடைய அக்குமாரர்களின் சஞ்சல கமனமும் இளமையினால் விளங்கியது. ஸ்படிகக்கற்களால் தளவரிசை போடப்பட்ட பூமியில் பழகிய அவ்வீரர்கள், முனிவர் உபதேசித்த 'பலை' 'அதிபலை' என்னும் மந்திரங்களின் மகிமையினால் பசிதாகத்தினால் வருந்தாமல் தாயாரின் சமீபத்திலுள்ளவர்களைப்போலவே இருந்தனர். வாகனங்களிலேறிப் பழகியவனும், லக்ஷ்மணனோடு கூடியவனுமான இராமன், பூர்வ விருத்தாந்தங்களை யுணர்ந்தவரும் தசரதரின் நண்பருமான முனிவர் முன்புகூறிய பூர்வ கதைகளைக் கேட்டுக்கொண்டே சென்றதால், வாகனத்திலேறிவந்ததுபோல நடந்த சிரமத்தையும் அறியவில்லை.

பின்பு ஓடைகள் இனிப்புள்ள நீராலும், பறவைகள் செவிகளுக்கு இன்பமான சப்தங்களாலும், காற்றுவாசனையுள்ள புஷ்பதூளிகளாலும், மேகங்கள் வெய்யிலை மறைத்து நிழலளிப்பதனாலும் இராகவர்களைச் சேவித்தன. தவசிகள் இராம லக்ஷ்மணர்களைப் பார்த்தமையால் பிரீதியடைந்ததுபோல, தாமரை யோடையைப் பார்ப்பதனாலும் சிரமத்தைப்போக்கும் மரங்களைக் காண்பதனாலும் பிரீதியடையவில்லை. நாணேற்றிய வில்லையுடைய இராமன் † 'ஸ்தாணு' மன்மதனை எரித்தவிடமான தபோவனத்தை யடைந்ததும், அழகிய சரீரத்தினால் மன்மதனுக்குப் பிரதிநிதியாக ஆனார்; கிரியையினால் ஆகவில்லை.

அப்பால் கௌசிகமுனிவர், தாடகை அகஸ்தியரால் சபிக்கப்பட்டிருக்கும் விஷயத்தை அவ்வீரர்களுக்குச் சொன்னார். உடனே அவர்கள் தாடகையினால் ஜனஸஞ்சாரமற்ற வழியில் வில்லின் முனையை ஊன்றிக்கொண்டு விளையாட்டாகவே வில்லில் நாணை ஏற்றினர். நாணின் ஒலியைக்கேட்டதும், கதுப்புகளில் அசைந்தாடும் குண்டலங்களையும் ‡ கிருஷ்ணபக்ஷத்து இரவைப்போன்ற நிறத்தையும் பெற்றுள்ள தாடகை, நாரைகளோடுகூடின மேகக் கூட்டத்தைப்போல முன்னேவந்து தோன்றினள். அவள் வரும் வேகத்தினால்

---

* நீரைவிடுவதால் 'உத்யம்' என்றும், கரையை அழிப்பதால் 'பித்யம்' என்றும் பெயர் வந்தது. மேற்கு முகமாக ஓடுகின்ற ஆறுகள் 'நதங்கள்' எனப்படும். † ஸ்தாணு = சிவபெருமான். ‡ கிருஷ்ணபக்ஷம் = தேய்பிறை.

வழியிலுள்ள மரங்கள் முறிந்தன; அவள் சவங்களின் நரம்புகளை உடுத்திக்கொண்டிருந்தனள்; பயங்கரமாகக் கர்ஜித்துக்கொண்டிருந்தனள். அவள், சுடலையிலுண்டான புசல்காற்றைப்போல, இராமனை அலங்கோலப்படுத்தினாள். அவள் இடுப்பில் மனிதர்களின் நரம்புகளையே ஒட்டியாணமாக அணிந்திருந்தனள்; அன்றியும் அவள் ஓர்கையை உயரத் தூக்கிக்கொண்டு எதிர்த்துவந்தாள். இராமன் அவளைப் பார்த்ததும் ஸ்திரீயைக் கொல்வதில் கருணையையும் விட்டு, அவள்மீது அம்பைவிட்டனர். இராமனுடைய அம்பானது கற்பாறையைப்போல் கடினமான தாடகையின் மார்பினில் பிரவேசித்து, ஓர் பொற்றலைச்செய்தது; அத்துவாரமே, யமன் ராக்ஷஸரிடம் பிரவேசிப்பதற்கு வழியாயிற்று. அம்பால் தனது மார்பு பிளக்கப்பட்டதும், தாடகை பூமியில் விழுந்தாள். அப்பொழுது காடுமுழுவதும் * கம்பமடைந்தது. அன்றியும், மூவுலகத்தையும் ஜயித்தமையால் ஸ்திரமான இராவணனது லக்ஷ்மிதேவியும் கம்பமடைந்தனள். அந்த † நிசாசரி, இராமனென்னும் மன்மதனது கூரிய கணை மார்பினில் தைத்ததும் துர்க்கந்தமுள்ள உதிரமென்னும் சந்தனத்தைப் பூசிக்கொண்டவளாய், யமனுடைய இருப்பிடத்தை யடைந்தனள். பின்னர் சூரிய காந்தக்கல், சூரியனிடமிருந்து விறகுகளைத்தரிக்கும் ஜோதிஸ்ஸைப் பெறுவதுபோல, இராமன், தனது ‡ பராக்கிரமத்தைக் கண்டு மகிழ்ந்த முனிவரிடமிருந்து மந்திரங்களோடு ராக்ஷஸர்களை யழிக்கும் § அஸ்திரத்தைக் கிரகித்தனன். பின்பு முனிவர், சமீபத்தில் ‖ 'வாமன'ருடைய பரிசுத்தமான ஆசிரமமிருப்பதைத் தெரிவித்தார். இராமன் அவ்விடஞ் சென்றதும் முற்பிறவியிலேற்பட்ட கிரியைகளை நினைக்காதவராயினும் உற்சாக முள்ளவராக ஆயினர்.

பின்னர் கௌசிக முனிவர் தனது தபோவனத்திற்குச் சென்றார். அவ்விடம் சிஷ்ர்கள் பூஜைக்குரிய சாமான்களைச் சேர்த்து வைத்திருந்தனர்; மரங்கள் மூடிய தளிர்களால் ¶ 'அஞ்சலி பந்தனம்' செய்து கொண்டிருந்தன; மான்கள் முனிவரைக் கண்டு மகிழ்ச்சியுள்ளனவாயிருந்தன. இரவிலும் பகலிலும் முறையே உதிக்கும் சந்திரசூரியர்கள், தமது கிரணங்களால் இருள் நெருங்காவாறு

* கம்பம் = அதிர்ச்சி. † நிசாசரி = இரவில் சஞ்சரிப்பவள்; ராக்ஷஸி. ‡ பராக்கிரமம் = வீரம்; வலிமை. § அஸ்திரம் = அம்புகள். ‖ வாமனர் = வாமனவதாரம் செய்த திருமால். ¶ அஞ்சலி பந்தனம் = கைகூப்பிக் கொள்ளல்.

உலகைக்காப்பதுபோல, அவ்விடம் தசரதன் புதல்வர் தீக்ஷை செய்துகொண்ட முனிவருக்கு இடையூறு நேராவண்ணம் வில்லைக் கையிலேந்திக் காத்துக் கொண்டிருந்தனர். பின்பு வேதிகையைச் சுற்றிலும் * பந்தூக மலரைப்போல் பருத்த இரத்தத்துளிகள் விழுந்தன. ருத்துவிக்குகள் இதைக்கண்டதும் யாகபாத்திரங்களை எறிந்துவிட்டு மேலொன்றும் செய்யாமல் பரபரப்படைந்தனர். உடனே இராமன், அப்பருந்தூணியிலிருந்து அம்பையெடுத்துக்கொண்டே:– ஆகாயத்தில் ராக்ஷஸசேனை வந்திருப்பதை அண்ணாந்து பார்த்தான். அச்சேனையின் கொடி கழுகுகள் பறப்பதனாலுண்டான காற்றால் அசைந்து கொண்டிருந்தது.

பிறகு இராமன், அச்சேனையின் தலைவர்களான ஸுபாகு மாரீசன் என்னும் இருவரையுமே குறிவைத்துக் கொண்டான். பிறரைப் பார்த்துக் குறிவைக்கவில்லை; பெரிய ஸர்ப்பத்தினிடம் பராக்கிரமமுடைய கருடன் மன்னுன்னிப் பாம்புகளைக் கொல்வதில் பிரவர்த்திப்பனோ? உடனே அஸ்திரங்களை யுணர்ந்த இராகவன், மிகுந்த வேகமுள்ளதும், வாயுவைத் தேவதையாகவுடையதுமான அஸ்திரத்தைப் பிரயோகித்து, அதனால் மலைபோல் பருவுள்ள மாரீசனைப் பழுத்த சருகை உதிர்ப்பதுபோலக் கீழே தள்ளினான். அப்பொழுது 'ஸுபாகு' வென்னும் ராக்ஷஸன் மாயையினால் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். வல்லமையுள்ள இராமர், கூரிய கத்தியினால் அவனைக் கண்டங்கண்டமாக வெட்டி ஆசிரமத்திற்கு வெளியிலுள்ள பறவைகளுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்தனன்.

இவ்வாறு இராமனும் இலக்குமணனும் யாகத்தின் இடையூறுகளை யொழிப்பதில் தமது சௌரியத்தைக் காட்டியதைக்கண்டு மகிழ்ந்த † ருத்துவிக்குகள் மௌனமுள்ள முனிவரின் யாககாரியங்களை முறையே நடத்திவந்தனர். முனிவர் யாகத்தின் முடிவில் ஸ்நானஞ்செய்ததும், தசரத புத்திரர்கள் அவரை நமஸ்கரித்தனர். அப்பொழுது அன்னோர் கூந்தல் சலித்துக் கொண்டிருந்தது. உடனே முனிவர் அவர்களை ஆசிர்வதித்துவிட்டு, தருப்பைகளைப் பிடித்துக் கொண்டிருந்தமையால் வடுவுள்ள கையினால் தடவிக் கொடுத்தார். அப்பொழுது யாகத்தை ஆரம்பித்த ஜனகராஜன் தூதர்மூலமாய் கேள

* பந்தூகம் = சிறு சச்சோலமென்னுஞ் செடி. † ருத்துவிக்குகள் = தக்ஷிணையை வாங்கிக்கொண்டு யாகத்தில் எஜமானனின் காரியத்தைச் செய்கின்ற பிராமணர்கள்.

சிக முனிவரைத் தனது நகரத்திற்கு வருமாறு அழைத்தனன். உடனே முனிவர் ஜனகனிடமுள்ள வில்லைப்பற்றிய விருத்தாந்தத்தை அக்குமாரர்களுக்குக் கூறினர். அதைக் கேட்டு அவர்கள் சந்தோஷமடைந்தனர். பிறகு முனிவர் அவர்களையும் அழைத்துக்கொண்டு மிதிலாபுரிக்குக் கிளம்பினர்.

வெகுதூரம் நடந்துசென்ற அம்மூவரும் மாலையில் மனோகரமான ஆசிரமத்தில் மரங்களின் கீழே வசிக்கலாயினர். அவ்விடம் நீண்ட தவத்தையுடைய கௌதம முனிவரின் தர்மபத்தினியானவள் க்ஷணநேரம் இந்திரனுக்கு மனைவியா யிருந்தனள். உடனே கல்லாயிருந்த அகலிகை மீண்டும் தனது அழகிய சரீரத்தைப் பெற்றாள். அது பாவத்தைப் போக்கும் இராமனது * பாததூளிகளின் † பிரஸாதமென்று சொல்லப்படுகின்றது.

பின்பு ஜனகர், கௌசிக முனிவர் இராம லக்ஷ்மணர்களோடு நகரத்திற்கு வந்திருப்பதை யறிந்து 'அர்த்தம்' 'காமம்' இவற்றோடு தருமமே உருவெடுத்து வந்திருப்பதாக நினைத்து, அவரை எதிர்கொண்டழைத்தான். மிதிலையிலுள்ள ஜனங்கள் ஆகாயத்திலிருந்து பூமியிலிறங்கிய "புனர்வஸு" தேவர்களைப்போன்ற இராகவர்களைக் கண்களால் பார்க்கையில், அன்னோர்மனம் இமைகொட்டுவதனாலேற்படும் விளம்பத்தையும் பொறுக்கவில்லை. யாகம் முடிவடைந்ததும் தக்க சமயத்தை யறிந்த கௌசிக முனிவர் ஜனகரிடம் "இராமன் தமது வில்லைப் பார்ப்பதில் உற்சாகமுள்ளவனா யிருக்கிறான்" என்று தெரிவித்தார்.

ஜனகராஜன் நற்குலத்திலுதித்த இராமன் அழகிய சரீரத்தைப் பெற்றிருப்பதையும் தனது வில் நாணேற்றிவளைக்க முடியாதிருப்பதையும் பார்த்து ஆலோசித்து, "வில்லை முறித்தவனுக்கே பெண்ணைக்கொடுப்பேன்" என்று, தான் ‡ பிரதிஞ்ஞை செய்ததைக் குறித்து வருந்தினன். பின்பு அவன் கௌசிகரைப்பார்த்து, "முனிவரே! பெரிய மதவேழத்தினாலும் செய்ய முடியாத காரியத்தில், யானைக்குட்டியின் செய்கை வீணுதுமாதலால், அதை நான் அங்கீகரிக்கவில்லை. அன்றியும் இவ்வில்லால் வில்லாளிகளான பல அரசர்கள் வெட்கிப்போயினர். அவர்கள் இவ்வில்லை நாணேற்றி முறிக்க முடியாமையால் "நாண்கயிற்றை இழுத்துக் கடினமான தோளை

* பாததூளி = கால்பட்ட தூசி. † பிரஸாதம் = அருள். ‡ பிரதிஞ்ஞை = உறுதிமொழி.

யுடைய எமது புஜங்களைச் சுடவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டனர்" என்று சொன்னார். அதற்கு முனிவர் "மன்னவா! இராமன் மிகுந்த பலமுள்ளவன்; அல்லது அதைப்பற்றிக் கூறுவது அவசியமன்று; வஜ்ராயுதம் தனது சக்தியை மலையில் காட்டுவதுபோல, இராமன் தனது பலத்தை உமது வில்லிற் காட்டியதும், நீரே அவன் பலத்தை அறிந்து கொள்வீர்" என்று பதில் சொன்னார்.

இவ்வாறு முனிவர் கூறியதைக்கேட்ட ஜனகர் * இந்திரகோபப் புழுவைப்போன்ற நெருப்பிலும் எரிக்குந்தன்மை இருப்பதுபோல, இளவயதுள்ள இராமனிடமும் பராக்கிரம மிருக்குமென்று நம்பினார். பின்பு இந்திரன் † தேவ தநுஸ்ஸை உண்டாக்குவதற்கு மேகங்களைக் கூட்டங்கூட்டமாக ஏவுவதுபோல அரசன் அவ்வில்லைக் கொண்டுவருமாறு சமீபத்திலுள்ள ஏவலாட்களுக்குக் கட்டளையிட்டான். வில்வந்ததும் இராமன் தூங்கும் பாம்பைப்போல் பயங்கரமான அவ்வில்லைக் கிரகித்தான்; சிவபெருமான், யாகம் மிருகரூபியாய் ஓடுகையில், அதைத் தொடர்ந்து செல்லுமாறு இவ்வில்லிலிருந்து அம்பை விட்டனர். மன்மதன் மனோகரமான மலர்க்கணையை நாணேற்றுவதுபோல, இராமன் மிகவும் பிரயாசையின்றியே மலைபோல் பலம்பொருந்திய வில்லில் நாணை ஏற்றினான். அப்பொழுது சபையோர் ஆச்சரியத்தினால் கண்மூடாமல் இராமனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இராமன் மிகவும் நெருக்கி யிழுத்தமையால் முறிந்த அவ்வில்லானது, இடிபோல் கோரமான சப்தத்தினால், மிகுந்த கோபமுள்ள 'பரசுராம'ருக்கு "க்ஷத்திரியகுலம் மீண்டும் உண்டாகிவிட்டது" என்று தெரிவித்ததுபோ லிருந்தது. இராமன் சிவனுடைய வில்லில் தனது பலத்தைக்காட்டித் தனது சௌரியத்தையே ‡ 'கன்யாசுல்க'மாகச் செய்ததுபற்றி ஜனகர் மகிழ்ந்தார். உடனே அவர் இராமனுக்கு உருவெடுத்த லக்ஷ்மிதேவியைக் கொடுப்பதுபோல யாகபூமியிலுண்டான 'ஸீதை'யை வாக்கால் தத்தஞ் செய்தனர்.

பின்பு ஸத்யமான பிரதிஞ்ஞையையுடைய ஜனகர், தேஜஸுள்ள முனிவர் முன்னிலையில் தனது பெண்ணை அக்னியின் முன்னிலையில் தானஞ் செய்வதுபோல, இராமனுக்கு தானஞ் செய்தனர். மகாகாந்தியுள்ள ஜனகர், அயோத்திக்குச்சென்று தசரத

* இந்திரகோபம் = பட்டுப்பூச்சி. † தேவதநுஸ் = ஆகாயவில். ‡ கன்யாசுல்கம் = கன்னிகையை மணக்கும் பொருட்டுக் கொடுக்கக்கூடிய பொருள்.

ரிடம் "இந்த நிமிகுலம் ஸீதையை விவாகஞ்செய்து கொடுத்தமையால் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்குமாறு அங்கீகரிக்க வேண்டும்" என்று தெரிவிக்கும்படி பெருமை பொருந்திய புரோகிதரை அனுப்பினர். தசரதரும் தக்க மாட்டுப்பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தார். நல்ல சமாசாரத்தைக் கூறுவதற்குப் புரோகிதரும் அவரிடம் போய்ச் சேர்ந்தார். கற்பகதருவின் பலனைப்போன்ற புண்ணிய சாலிகளின் விருப்பம், அப்பொழுதே பயனளிக்கின்றது.

இந்திரனை நண்பனாகக் கொண்டவனும், ஸ்வாதீன முள்ளவனுமான தசரதன் ஜனகரின் புரோகிதர் வந்ததும் உபசாரங்கள் பலவும் செய்து, இருக்கையில் அமரச்செய்தான். உடனே புரோகிதர் தான் வந்த காரியத்தைத் தெரிவித்தனர். அதைக்கேட்ட தசரதன் அப்பொழுதே சேனைகளை அழைத்துக்கொண்டு மிதிலாபுரியைக் குறித்துக் கிளம்பினர். சேனைகள் செல்லுவதனாலுண்டான புழுதி சூரியனை மறைத்தது. தசரதன் மிதிலைக்குவந்து சேர்ந்தான். அவன் சேனை உத்யானவனத்திலுள்ள மரங்களை முறித்து அலங்கோலப்படுத்தியது; யுவதி, காதலன் தீர்க்கமாகப் போகிப்பதைப் பொறுப்பதுபோல, * அந்நகரி, தசரதன் சேனை தகைவதைப் பிரீதியினால் பொறுத்தது. நல்லொழுக்கத்தில் நிற்பவர்களும் வருணன், வாஸவன் இவர்களை ஒத்தவர்களுமான அவ்வேந்தர் இருவரும் சேர்ந்து தமது மக்களின் விவாகத்தைத் தமது பகிமைக்குத் தக்கபடி நிறைவேற்றி வைத்தனர். இராமன் ஸீதையையும், பின்பு லக்ஷ்மணன் ஊர்மிளையையும் மிகுந்த பலமுள்ள பரதன் சத்ருக்னன் இருவரும் முறையே 'குசத்துவஜன்' புத்திரிகளான மாண்டவி, சுருதகீர்த்தி இவர்களையும் விதிப்படி விவாகஞ்செய்து கொண்டனர். புதிய மனைவிகளைப் பெற்ற அந்நால்வரும் தசரதரின் பல சித்தியோடு கூடிய ஸாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நான்கு உபாயங்களைப்போல விளங்கினர். ராஜ கன்னிகைகள் ராஜ குமாரர்களாலும், அவர்கள் ராஜ குமாரிகளாலும் பயனைப் பெற்றனர். அவ்வரன்களுக்கும் வதூக்களுக்கும் ஏற்பட்ட சேர்க்கையானது † பிரகிருதிகளுக்கும் பிரத்தியயங்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் போலிருந்தது.

---

* அந்நகரி = அந்நகரம்; உவமானம் பெண்பாலாயிருப்பதால் உவமேயமான நகரத்தையும் 'நகரி' என்று பெண்பாலாகக் கூறப்பட்டது.

† 'பிரகிருதி' (பகுதி)யும் 'பிரத்திய' (விகுதி)யும் சேர்ந்துதான் ஒரு பொருளைச் சாதிக்கும்; அதுபோல் வதூவரர் இருவரும் எக்காரியத்திலும் சம்பந்தித்திருப்பர் என்பது கருத்து.

இவ்வாறு அன்புள்ள தசரதர், மிதிலாபுரியில் அங்கான்கு புதல்வருக்கும் விவாகத்தை முடித்துவிட்டு, மூன்று வழிகள் வந்ததும், ஜனகரைத் திருப்பி யனுப்பிவிட்டுத் தனது நகரத்திற்குக் கிளம்பினார். வழியில் ஒரு சமயம் 'துவஜங்க'ளென்னும் மரங்களை முறித்துக்கொண்டு எதிர்த்துவந்த காற்றானது, சுழலோடுவரும் ஆற்று வேகம் கரையைக் கரைப்பதுபோல, அவன் சேனையை மிகவும் வருத்தியது.

பின்பு மேகங்கள் சூரியனைக் கோட்டைபோற் சூழ்ந்து நெருங்கிக் கொண்டபடியால், அதற்குள் மறைந்தவாறு விளங்கும் சூரியனைக்கப்பிய முகிற்கணங்களின் தோற்றமானது, கருடனால் கொல்லப்பட்ட பாம்பு, கக்கிய தன் ஸ்ரோத்தினத்தை விடாது சுற்றிப் பற்றிச் சுருண்டு கிடப்பதுபோற் காணப்பட்டது. * கழுகிறகுகளென்னும் அழுக்குள்ள கூந்தலையும், சந்தியாகால மேகங்களென்னும் உதிரமுள்ள வஸ்திரங்களையும், இராஜஸ்வலைகளையும் பெற்றுள்ள திசைகள், இராஜஸ்வலைகளான பெண்களைப்போலப் பார்க்கத் தகாதவைகளாக ஆயின.

சூரியன் வசிக்கும் திசையிலுள்ள நரிகள், க்ஷத்திரியர்களின் உதிரத்தினால் பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் செய்த பரசுராமனைத் தூண்டுவனபோல, பயங்கரமாக ஊளையிட்டன. சகுனங்களை யுணர்ந்த தசரதர், துற்சகுனங்களைக்கண்டு, இவற்றை எவ்வாறு சமனம் செய்யலாமென்று வஸிஷ்டரைக் கேட்டார். அதற்கு முனிவர் 'இவை முடிவில் சுபத்தையே அளிக்கும்' என்று கூறி அரசன் வருத்தத்தைக் குறைத்தனர்.

உடனே பராக்கிரம நிதியாகிய பரசுராமர் சேனைக்கெதிரே வந்து தோன்றினார். சேனைகள் கண்களைத் துடைத்துக்கொண்டு வெகு நேரம் ஊகித்துப் பார்த்த பிறகுதான் அவர் புருஷனென்று தெரிய வந்தது. அவர் † 'உபவீதத்தை அடையாளமாகவுடைய தந்தையின் அம்சத்தையும் வில்லால் நிச்சயிக்கப்பட்ட தாயின் அம்சத்தை

---

* தூமையான பெண்கள், கழுகிறகுகளைப்போன்ற அழுக்கடைந்த கூந்தலையும், சந்தியாகால மேகங்களைப்போன்ற உதிரமுள்ள ஆடைகளையும், இரஜஸ்ஸையும் பெற்றிருப்பதால், இங்கு அத்தகைய திசைகள் அவர்களைப்போல் பார்க்கத் தகாதவைகளாக ஆயின என்பது கருத்து.

† இவர் வலதுதோளில் பூணூலைத் தரித்திருப்பதால் இவர் தந்தை பிராமணரென்பதும், கையில் வில்லைப் பிடித்திருப்பதால் இவர் தாய் க்ஷத்திரிய குலமென்றும் தெரிகிறதென்பது கருத்து.

யும் தரித்திருந்தனர். அதனால் அவர், சந்திரனோடுகூடின சூரியன் போலவும், ஸர்ப்பத்தோடுகூடின சந்தன மரம்போலவும் விளங்கினர். முன்பு ஒருசமயம் கோபத்தினால் அறிவுகுன்றி மரியாதையைத் தாண்டிய தந்தையின் கட்டளையினால் பரசுராமர் நடுநடுங்கும் தாயின் தலையைக்கொய்து கருணையை விட்டனர். பின்பு பூமியை ஜயித்தார். அவர் வலதுசெவியில் இருபத்தொரு மணிகளுள்ள ஓர் உருத்திராக்ஷமாலையை மாட்டிக்கொண்டிருந்தனர். அதனால் அவர், தான் க்ஷத்திரியர்களை இருபத்தொரு தலைமுறையாக வதஞ்செய்திருப்பதைத் தெரிவிப்பதுபோலிருந்தார்.

தசரதர் அவரைக்கண்டதும் பரசுராமர் தனது தந்தையை க்ஷத்திரியன் கொன்றமையால் க்ஷத்திரிய வம்சத்தையே பூண்டோடு அழிப்பதில் தீக்ஷை செய்துகொண்டிருப்பதையும், தனது புதல்வர் பாலர்களாயிருப்பதையும், தனக்கு மூப்பு வந்துவிட்டதையும் ஆலோசித்து வருந்தினர். மாலையிலும் ஸர்ப்பத்தினிடமும் இரத்தினம் அமைந்திருப்பதுபோல, புதல்வனிடமும் பயங்கரமான பகைவனிடமும் விசேஷமில்லாமல் 'இராம'னென்னும் பெயர் அமைந்திருந்தது, தசரதருக்கு மனோகரமாயும் பயங்கரமாயும் இருந்தது. உடனே தசரதர் "இதோ! அர்க்கியம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினர். பரசுராமர் அதைப் பொருட்படுத்தாமல் இராமனிருக்குமிடஞ் சென்று, கருவிழியைச் சுழற்றிப் பார்த்தார். அப்பொழுது அவர் கண் க்ஷத்திரியரிடமுள்ள கோபத்தீயின் சுவாலையைப் போலிருந்தது.

பின்பு பரசுராமர் அம்பை முஷ்டியினால் பிடித்து, வில்லை விரல்களின் இடுக்கில் சரிப்படுத்திக்கொண்டு, யுத்தஞ்செய்ய விருப்பமுள்ளவராய் முன்னே நிற்பவனும், பயமற்றவனுமான இராமனைப் பார்த்துச் சொல்லலானார்:—"ஹே இராகவா! என் தந்தையைக் கொன்றமையால் க்ஷத்திரிய ஜாதியே எனக்குப் பகையுள்ளது; ஆதலால் நான் க்ஷத்திரியர்களைப் பலதடவை கொன்று * சமனமடைந்தேன்; தடியாலடிப்பதனால் தூங்கும் பாம்பு சீறி எழுந்திருப்பதுபோல, நான், உனது பராக்கிரமத்தைக் கேட்டமையால் கோபமுற்றுச் சீறிக் கொண்டிருக்கிறேன். பிறமன்னவர்களால் முறிக்கமுடியாத ஜனகன் வில்லை நீ முறித்தனையன்றோ? அதனால் நான், எனது வீரியமென்னும் † சிகரத்தையே முறித்துவிட்டதாக நினைக்கிறேன்

* சமனம் = ஒழிவு. † சிகரம் = மலையினுச்சி.

முற்காலத்தில் உலகில் யாரேனும் 'இராமன்' என்று கூறினால் அச்சப்தம் என்னையே குறித்தது; நீ * உதயமடைந்ததும் உன்னையும் குறிக்கும் அந்த சப்தம் என்னை நாணச் செய்கின்றது. மலையினும் மழுங்காத அஸ்திரத்தை வகிக்கும் எனக்கு † ஹோமப்பசுவின் கன்றை அபஹரித்த கார்த்தவீரியனும் எனது புகழை அபகரிக்க முயற்சித்த நீயும் ஆகிய இருவருமே சமமான பிழைசெய்த பகைவர்கள். ஆதலால், எனது சௌரியம் க்ஷத்திரியர்களை யழித்திருந்தும், உன்னை ஜயிக்காமையால் என்னை மகிழ்விக்கவில்லை ‡ அடுக்களையிற் பிரகாசிப்பதுபோல கடலிலும் ஜ்வலிக்கும் அக்னியே கொண்டாடத் தக்கது. விஷ்ணு, பலத்தினால் ஸாரத்தைக் குறைத்துவிட்டமையால் நீ, சிவன்வில்லை முறித்தனை; ஆற்றுவேகத்தினால் வேரறுந்துகரையில் நிற்கும் மரத்தை § மந்தமாருதமும் தள்ளிவிடுகின்றது. ஆதலால் நீ, எனது வில்லை நாணேற்றி முறிக்கவேண்டும்; சமமான புஜபலத்தையுடைய நீ, இவ்வில்லை இழுத்துவிட்டால், நான் தோற்றவனே; வேறு யுத்தஞ்செய்து பார்க்க வேண்டாம்; அல்லது மிகுந்த காந்தியுள்ள கோடரியின் முனையைக் கண்டு பயந்திருந்தால் வீணே நாணை இழுத்துக் கடினமான விரல்களையுடைய நீ, அபயமளிக்குமாறு அஞ்சலி பந்தனஞ் செய்துகொள்" என்று சொன்னார்.

இவ்வாறு பயங்கரமான தோற்றமுடைய ‖ பார்க்கவர் சொன்னதும் இராமன் புன்னகைபுரிந்து, யாதும் பதிற்கூறாமல் அவரிடமிருந்த வில்லைக் கிரகித்தார். இராமன், முந்திய நாராயணாவதாரத்தில் வைத்திருந்த வில்லைப் பெற்றதும், இந்திரவில்லால் அடையாளஞ் செய்யப்பட்ட புதிய மேகத்தைப்போல, கண்களுக்கு இனியவராகக் காணப்பட்டார். பலவானான இராமன், பூமியில் அம்பின் முனையை ஊன்றிக்கொண்டு நாணை ஏற்றினார். உடனே பரசுராமன், புகையால் எஞ்சிநிற்கும் நெருப்பைப்போல, $ தேஜஸற்றவராக ஆயினர். ஜனங்கள், ஒருவரையொருவர் எதிர்த்து நிற்பவரும், வளர்ந்தும் குறைந்தும்வரும் தேஜஸ்ஸைப் பெற்றவருமான இராகவன் பார்க்கவன் இருவரையும் சாயங்காலம் ¶ பர்வகாலத்திலுள்ள சந்திர சூரியர்களைப்போலப் பார்த்தனர்.

---

* உதயம்:—பிறத்தல்; பிறவி. † முன்பு 'பிருகு' முனிவரின் ஆசிரமத்திலிருந்து கார்த்தவீரியன் ஹோமப்பசுவின் கன்றைப் பலவந்தமாக அபகரித்தான் என்ற பாரதக்கதை இங்கு உணரத் தக்கது. ‡ அடுக்களை = சமையலறை. § மந்தமாருதம் = தென்றல். ‖ பார்க்கவர் = பரசுராமர். $ தேஜஸ்:—ஒளி. ¶ பர்வகாலம் = அமாவாஸ்யா காலம்.

பின்பு ஷண்முகனைப் போன்றவரும் கருணையுள்ளவருமான இராமன், பார்க்கவன் சௌரிய மற்றிருப்பதையும் தனது கணை பிளக்கத் தயாராயிருப்பதையும் ஆலோசித்து பரசுராமரைப்பார்த்து "நீர் என்னை அவமதித்துப் பேசியிருந்தும் பிராமணரா யிருப்பதால் நான் உம்மைக் கருணையின்றி அடிக்கமுடியவில்லை; ஆனால் இவ்வில்லால் உமது கமனத்தைத் தடுக்கவா? அல்லது நீர் யாகஞ்செய்து சம்பாதித்த ஸ்வர்க்க லோகத்தைத் தகைபட்டுமா? சொல்லும்" என்று சொன்னார். அதற்கு முனிவர் இராமனைப் பார்த்து, "புத்திமான்களில் சிரேஷ்டனே! தந்தையின் பகைவர்களைச் சாம்பலாக்கியவனும் பூமியைத் தக்கவருக்குக் கொடுத்து கிருதகிருத்யனானவனுமான நான், பரமபுருஷனாகிய உம்மிடம் தோல்வியுற்றதும் கொண்டாடத் தக்கதே; நான் புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று ஸ்நானஞ்செய்ய விருப்பமுள்ளவனா யிருக்கிறேன். ஆகலால் எனது கதியைக் காத்தருளும்; எனக்குப் போகத்தில் விருப்பமில்லாமையால், ஸ்வர்க்கத் துவாரத்தையே தகைந்துகொள்ளும்; அதனால் பாதகமில்லை" என்றார்.

பின்பு இராமனும் அவ்வாறே சரியென்று அங்கீகரித்து, கிழக்குதிசையை நோக்கி அம்பை விட்டனன். உடனே அவ்வம்பானது புண்ணியசர்லியான பார்க்கவன் செல்லாவாறு ஸ்வர்க்கத்தின் வழியைத் தகைந்துகொண்டது. பிறகு இராமன், பொறுத்தருளவேண்டுமென்று பார்க்கவரின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். பலவான்கள் பலத்தினால் ஜயித்த பகைவரை வணங்குவது அவர்களுக்குப் புகழையே அளிக்குமன்றோ? உடனே பார்க்கவன் இலக்ஷ்மணனோடு கூடியிருக்கும் இராமனைப் பார்த்து, "ராஜகுமாரா! நான் தாய் மூலம் வந்த ரஜோகுணமுடைமையை விட்டுத் தந்தையிடமிருந்து வந்த சமனத்தை அடைந்திருக்கிறேன். ஆகலால், நீர் சிறந்த பலனான ஸ்வர்க்கத்தைத் தகைந்ததும், எனக்குச்செய்த உபகாரமேயாகும். நான் போகின்றேன்; தேவர் காரியங்களை முடிப்பதில் முயற்சியுள்ள உமக்கு இடையூறொன்றும் நேரவேண்டாம்" என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

பார்க்கவன் போனதும் தசரதர், வெற்றிபெற்ற புதல்வனை அன்பினால் தழுவிக்கொண்டு, மீண்டும் பிறந்துவந்ததுபோல் மகிழ்ந்தார்; க்ஷணப்பொழுது சோகமுற்ற தசரதருக்குண்டான சந்தோஷம், காட்டுத்தீயால் சூழப்பட்ட மரத்தில் மழைபெய்தது போலிருந்தது. பின்னர் சிவபெருமானைப்போன்ற தசரதன், வழியில் மனோ

காமான கூடாரங்களில் சில இரவுகள் தங்கி வசித்துவிட்டு, அயோத்யாபுரியில் பிரவேசித்தான். அவ்விடமுள்ள ஸ்திரீகள் பலகணி வழியாக ஸீதையைப் பார்த்துக் கொண்டிருந்தமையால், அந்தச் சாளரங்கள் கருநெய்தல் மலர்களைப் பெற்றவைபோல விளங்கின.

(பதினோராவது ஸர்க்கம் முடிந்தது)

* * *

By: M. M. Narayanasawmy Ayer, (Pandit)

Mudikondan, P. O.

(via) Nannilam.

கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமான் வை. சா. வேங்கடராம ஐயர்)

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-5, பக்கம்-102)

வித்தை பயிற்றல்.

இனி, இவை அனைத்தும் இனிது நிறைவேறுதற்கு இத்துறையிற் பழக்கமும், இதன் வரலாறு பற்றிய அறிவும் வாய்ந்த பலர் உழைப்பாளர்களாக முன்வரல் வேண்டும். அத்தகைய பழக்கமும், அறிவும் வித்தைபயிலும் மாணவப் பருவத்திலேயே வாய்ப்பது தான் சிறந்த தொன்றாகும். அவை வாய்ப்பதற்குக் கலாசாலைகளிற் படிக்கும் மாணவர்களுக்கு 'மாணவர் கூட்டுறவுச் சங்கம்' என்ற சங்கங்களை நிலையிட்டுப் பழக்கி வரல் வேண்டும். வகுப்புக்களில் வேற்று நாடுகளிலும், நமது நாட்டிலும் நடைபெறும் கூட்டுறவு வரலாறுகளைப் பற்றிய புத்தகங்களைப் பாடமாகவைத்து அம்முறையின் தத்துவங்களையும் பயன்களையும் விளக்கிப் போதித்து வரல் வேண்டும். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது பெரியோர் வாக்கு.

அங்ஙனமாயின், அன்னார் தாங்கள் கலாசாலைகளிற் கற்றுப்பழகி இன்புற்றதை நினைந்துநினைந்து வயதுவந்த பிறர்க்கும், நாட்டினர்க்கும் உரைத்து நமது இபக்கத்தைப் போற்றி வளர்த்தற்குப் பெருதவிசெய்யக் கூடியவராவார். இத்தகைய ஆற்றல்சான்ற மாணவர்கள் பலர்தோன்றும் நாளே நன்னாளாகும். இங்கே உலகம் வேண்டுவது இஃதென்றறிவிக்கும்.

"அறிவும் ஒழுக்கும் அன்றே யார்க்கும்
அன்னம் முதலாத் துன்னிய பலவும்
கொடுத்துதவு வதாம் கொள்கையும் அன்றே
அதிகாரிகள் புன் முறுவலும் அன்றே
எதனையும் அழிபட தெழுதும் சிறிய
கைவன் மையும் அன்றே மெய்யோடு
உண்மையாய் உழைத்தலில் உள்ளம்
தளரா தமை ஆண் தன்மைசேர் மக்களே."

என்ற பாடற்பகுதிகளும் ஆராயத்தக்கன.

விரித்துரை யாடல்.

இங்ஙனம், ஒரு கூட்டத்தார் விசேஷ அறிவு, ஆற்றல்களைப் படைத்தனராயின் அன்னார் தம்முடைய புத்தி சக்திகளைப் பலருக்கும் விரித்துரைத்து இந்தப் பரிசுத்தமான இயக்கத்தில் அனைவரையும்வந்து கலந்து இன்புறுமாறு போதிய பிரசார வேலையைச் செய்தல் வேண்டும். 'எத்தகைய பிரசாரவேலையும் முதலில் கிராமவாசிகளுக்கும், பெண்பாலர்களுக்கும் செய்ய வேண்டியதுதான் முக்கியமானது; அதுதான் காரிய சித்திக்கும் ஏற்றது' என்று கூறப்படுவதும், அதற்கு மேற்கோளாகவரும்,

"தொண்டர்காள் தேசத் தொண்டர்காள் நீவிர்
தேசநன்மைக் கெனச் செயும்முறை யீட்டை
பட்டணவாசக் கெட்டபேய்க் கொதுங்கி
மறுவிலாக் கிராம வாழ்க்கைப் பெருமையே
கொண்டு நன் கியற்றுங் குணங்கெடா ஏழைச்
சோதா ரிடத்தும் சுத்தம் தவறாச்
சோதரி மார்க்கும் செய்வதே காரிய
சித்திக் கியைந்ததாம் அதனை
நத்திச் செய்வீர் நன்றது வாமே."

என்ற செய்யுளும் இங்கே கவனிக்கத்தக்கது.

உலகோருங் கமைத்தல்.

இங்ஙனம், இம்மேலான முறையின் தத்துவங்கள் இயன்ற அளவு ஒருமுகமாய் ஒவ்வொருவராலும் ஆங்காங்கு விரித்துரைக்கப்படின் அதன்பயனாக உலகினர் எல்லோரும் கூட்டுறவினராக ஆதல் கூடும் என்பது ஒருதலை. "நிறைந்தபொருள் இருப்பதிலும் உதவி செய்யக்கூடிய மனிதர் பலர் செறிந்திருப்பது மிகமேலானது",

என்பதை ஒவ்வொருவரும் பற்பல சமயங்களில் அனுபவத்தில் உணர்ந்தே இருப்பர். அவசியமான காலங்களில் மாத்திரம் சூழ்ந்துள்ள மாந்தர்களுடைய உதவிகளை எப்படியேனும் பெற்றுக் கொள்ள விரும்பங்கொண்டு முயலுவோன், அந்தகையினரை ஏனைய சமயங்களில் மறப்பது படிற்றொழுக்கமாம். நமது இயக்கமோ மக்களது ஒருமனப்பட்ட கூட்டுறவையே தனக்குரிய அடிப்படையாகக் கொண்ட தூய செயன்முறையாம்.

இனி, ஆங்காங்குள்ள கூட்டுறவாளர் ஒன்று சேர்ந்து, தங்கள் தங்களுக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்வதுடன், தங்களைப் போலவே முயலும் வேற்றிடங்களிலுள்ள கூட்டுறவாளர்களுடனும் கலந்து வாழ முயலுவது தான் 'உலகொருங்கமைதல்' என்று கூறப்படுவது. இப்படியே அனைவரும் கூட்டுறவாளராகி, அனைத்துச் செயல் முறைகளையும் கூட்டுறவு முறையின் தத்துவப்படியே நின்று கூட்டுறவுகொண்டே நடத்தி வருவார்களாயின் அவர்களாற் செய்து கொள்ள முடியாத செயல்களும், அடைய முடியாத நன்மைகளும் கடவுட்படைப்பில் இல்லை என்றே கூறலாம். "முயன்றால் முடியாத தொன்றில்லை" "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" "எல்லாரும் ஒன்றுபிக்க நினைப்பதுவே—அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்பன முன்னோர்மொழி.

முடிவுரை.

பெரியோர்களே, இத்துணையும் கூறியவாற்றால் உலகினர் இனிது உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதன உண்டி, உடை, உறையுள் என்பனவே என்பதும், அவற்றை அடைவதற்குத் தடையாயிருப்பன பொது ஜனங்களிடத்திலுள்ள வறுமை நிலைமை, சிக்கனமின்மை, கடன் தொல்லை, வட்டிக்கொடுமை, போட்டிப் பெருக்கம், இடைக்கொள்ளை முதலிய பலவாம் என்பதும், பொது ஜனங்கள் அவற்றினின்றும் நீங்கி, விடுதலை பெறவேண்டுமாயின் பண்டப்பிரிவினைமுதல் உலகொருங்கமைத்தல் ஈறாக இக்கூறப்பட்ட-சிறிது முன் பின்னாக—பல துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் பரவல்வேண்டும் என்பதும், அவை தோன்றுவதற்கு இன்றியமையாதது இம்முறையின் தத்துவங்களை இனிதுணர்ந்த பிரசாரகர்களது பேருழியமே என்பதும், அத்தகையினர் பலர் உண்டாவதற்கு நமது பிற்காலச் செல்வங்களாகிய—இரும்புத் தூண்களாகிய சிறுவர்கள் கற்குங் காலத்திலேயே இனிது படிப்பிக்கப்படவேண்டும் என்பதும், அங்-

ஙனம் கற்றுத்தேர்ந்த மாணவர்கள் தாங்கற்றவற்றை நாடுநகரம் முதலிய பல இடங்களிலும்—முக்கியமாய்க் கிராமங்களிலும் ஆண் பெண் என்ற இருபாலர்க்கும் பயன்படுமாறு இனிது பரத்தமுயல வேண்டும் என்பதும், இங்ஙனம் நிறைவேற்றப்படின் அதனால் உலகினர் அனைவரும் கூட்டுறவாளர் என்ற உயரிய நிலைமையைப் பெற்று எண்ணிய எண்ணியாங்கு எய்தற்குத் தக்க ஏற்றமான நிலைமையினைப் பெறுவர் என்பதும், பிறவும் ஒருசிறிது புலனும்.

பெரியோர்களே, உலகநிலைபேற்றிற்கு மூன்று வகைப்பட்ட மனிதர்கள் வேண்டும். ஒருசாரார் தம்மாற் செய்யக்கூடியவற்றை உண்மையாகவும், உறுதியாகவுஞ் செய்துகொண்டு மக்களாவார் அடையவேண்டியதெனத் தம்மால் நம்பப்பட்ட நல்லதொரு பெரு நோக்கத்தையே இடைவிடாமல் வற்புறுத்திவருபவர். மற்றொரு சாரார் இயன்ற அளவு செய்வதிற் பின்வாங்காது ஊக்கத்துடன் உழைப்பவர். பிறிதொரு சாரார் இவ்விரு திறத்தினருக்கும் துணை போபவர். அடியேன் அவற்றுள் முதல் வகுப்பிற் சேர்ந்துழைக்க முயல, விரும்புகின்றவன். ஆதலினால் அடியேன் கூறுவன 'முற்றும் நிறைவேற்ற முடியாதனவா யிருக்கின்றன' என்று அஞ்சாதீர்கள். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றும், "அறிவறிந்து ஆள்வினை யின்மைபழி" என்றும் பெரியோர்கள் மொழியா நிற்பர்.

ஆகவே, மகா பரிசுத்தமான கூட்டுறவுக்கொடியின் கீழ்த்தங்கி இன்புற முயலும் நாம் நம்முன் காணப்படும் அனைத்துக் கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் சேர்ந்துழைத்தல் வேண்டும். சேராதவர்களையும் சேர்ந்தின்புறுமாறு தூண்டுதல் வேண்டும். ஒற்றுமையால் வரும் பெரும்பயனை நாமும் நுகர்ந்து உலகினரையும் நுகருவித்தல் வேண்டும்.

பெரியோர்களே, அடியேனுடைய புன்சொற்களைக் கூறி இனியும் உங்களது மேலான காலத்தை வீண்போக்க அடியேன் விரும்பவில்லை. அவ்வளவு நேரம் அடியேனுடைய புன்சொற்களுக்குச் செவிசாய்த்துக் கேட்டமைக்கு உங்கள் அனைவருக்கும் வந்தனம்.

சபையோர்களே, இனிக்கடைசியாக அடியேன்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா கார சம
போகம் எனும் கூட்டுறவு வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்கு தந்தோ இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்ப தற்குச் சேர வாரும் செகத்தீரே."

என்று நமது தாயுமானப் பெருமான் அடிகளது திருவாக்கில் சில சொற்களை மாற்றி உங்களனைவரையும் இந்த உலக விடுதலைக்கு ஆதாரமான பரிசுத்த இயக்கத்திற் கலந்துழைக்குமாறு விரும்பிக் கூவி அழைத்து அடியேனது கடமையைப் பூர்த்திசெய்து கொள்கிறேன். சுபம்.

(முற்றிற்று)

சிறுவர் சிறுமிகள் பகுதி.

ஞயம்பட வுரை.

இத்திருவாக்கியம் நற்ஞான மாதாவாகிய சாரதாவதாரமென்னும் ஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளியது. இதன் கருத்து: நீ பேசுஞ்சொற்களில் இனிமையுண்டாகப் பேசு என்பதேயாம். அதாவது நீ இனிமையான சொற்களையே பேசவேண்டுமென்பதே.

ஒருவன், ஒருயாசகன் தன்னை நோக்கி, "ஐயா எனக்கு அதிக பசி இதைத் தீர்த்துக்கொள்ளவே தங்களை வந்து யாசித்தேன்" என்று இரந்து நிற்குங்கால் இவன் தன்னிடம் அதிகமொன்றுமில்லாவிட்டாலும் தான்கொண்டுள்ள ஒரு பைசாவையோ, அல்லது தின்பண்டத்தையோ அவனுக்குக் கொடுத்து அன்பான வார்த்தைகளால் அவனை உபசரித்தால் அவன் கொண்டுள்ள பசியும் உடனே தீர்ந்துவிடும். அப்போது அவன், "நாம் இவரிடம் இந்த அன்பான வார்த்தைகளைக் கேட்டவே நம்கொடும் பசி நம்மை விட்டோடி விட்டதே! இவரைப்போலவே உலகத்தில் யாவரும் அன்பான வார்த்தைகளைப் பேசினால் ஒவ்வொருவரும் எவ்வளவு சந்தோஷமடைவார்கள்" என்று அப்புண்ணிய சீலனை வாயார வாழ்த்திக்கொண்டே செல்வான்.

மேலும் அப்புண்ணிய சீலன் மனதிலநேக கெட்ட எண்ணங்கள் வைத்துக்கொண்டு மேலுக்கு மாத்திரம இன்சொல் பேசுந் தன்மையுடையவனல்லாதவனாக விருக்கவேண்டும். அப்போது மாத்திரந்தான் அவன் புண்ணிய சீலனென்று புகழ்பெறுவான். அஃதின்றேல் அவன் புண்ணிய சீலனாக மதிக்கப்படான். யாவனொருவன் பிறரைக் கண்டபொழுதே முகத்தால் விரும்பி இனிமையாகப் பார்த்து இன்சொற்களை அவர்களிடம் குறைவறக் கூறுவானோ அவனுக்குத் துன்பமென்னுஞ் சனியன் தலைகாட்டாது ஒழியும். எப்படியெனில் இன்சொல் பேசுகிறவன் எப்பொழுதுஞ் சந்தோஷமாகவே இருப்பான். அதுவே அவனுக்குப் பெருத்த செல்வம். அதல்லாமல சிறசிலர் பிறரைக் கண்டபொழுதே யாதொரு பகையுமில்லாமலே இரு சேவல்கள் சண்டையிட்டுக் கொள்வது போல் பகைமைக்குணமும் பொறாமைக்குணமும் மேலிட்டுப் பகைத்துக் கொள்கிறார்கள். ஒரு சிறு காரியத்திற்கும் பெருஞ்சண்டை தொடுப்பார்கள். இத்தனையுமல்லாமல் பிறர் நன்றாகவிருப்பதைப் பார்த்து யாதொரு குற்றஞ் செய்யாவிடினும் அவர்களைக் கோபமாகப் பேசிவைது அடித்துத் துரத்தல் முதலியன செய்பவர்களுமுண்டு. இவைபோன்ற தன்மையுடையவர்கள் செல்வந்தர்களாயிருந்தாலும் அவர்கள் பாக்கியவான்களல்லர். அன்றியும் துரியோதனன் யாவரிடத்தும் எப்பொழுதும் கடுஞ்சொற்களையே கூறிவந்ததனால், கடைசியில் விதுரன் முதலானவர்களும் பகைவர்களாக போரில் தோல்வி யடைந்து உடல், பொருள், ஆவி மூன்றனையு

யிழந்து பழிக்கு ஆளாயினானென்பதை நாம் படித்திருக்கிறோம். இதற்கு எதிரிடையாக, பஞ்சபாண்டவருள் மூத்தவராகிய உத்தம தருமர் எப்போதும் ஒரே நிகராக யாவரிடத்தும் இன்சொற்களையே கூறிவந்ததனால் அதன் பயனாக தான், நாடிழந்து சிறுமையுற்ற காலத்திலும் பலரால் உதவி புரியப்பெற்று இம்மையில் தான் போர் வென்று அரசு பெற்று ஆண்டதோடும் மறுமையில் சுவர்க்கலோகமடைந்ததும் இங்கு கவனிக்கத்தக்கது. இதுபற்றியே,

"வன்சமர்கட் பால்வென்று மாநிலமா ளத்தருமன்
இன்சொல்லாற் பெற்றா னிரங்கேசா—முன்சொல்
நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப் பிரியாச் சொல்."

எனப் பெரியோர் கூறியுள்ளார்.

இதன்றியும் ஸ்ரீராமர் விசுவாமித்திரரோடும் தன் சகோதரன் இலக்குமணனோடும் மிதிலைக்குச்சென்று அந்நகரத்தரசனாகிய ஜனக மகாராஜனால் ஏற்படுத்தப்பட்ட வில்லை வளைத்ததுமல்லாமல் ஒடித்து அதன்பயனாக சீதையை மணம்புரிந்து தன் பிதா முதலானோரோடு தன் நகர்க்குத் திரும்புங்கால் பரசுராமரென்பவர் ஒரு வில்லுடன் ஸ்ரீராமரைச்சந்தித்து "நீ அந்தச் சொத்தைவில்லை யொடித்துவிட்டோமென்று கர்வங் கொள்ளாதே, இதோ நான்கொண்டு வந்திருக்கும் இவ்வில்லை வளை"யென ஸ்ரீராமர் அநேக இன்சொற்களைக் கூறியும் பரசுராமர் "வெட்டெனப் பேசேல்" என்பதையும் மறந்து தனக்கிருக்கும் இராஜ துவேஷத்தினாலும் அநேக விதமான கடுஞ்சொற்களைக்கூற, ஸ்ரீராமர் அவ்வில்லையுங் கையேந்தி யொடித்தார். இதனால் பரசுராமர் பங்கப்பட்டுத் தன் தவத்தில் பாதியையும் இழந்தார். இதனாலே "பரசுராமர் பங்கம்" என்பது வெளியாகின்றது. இதற்குமேல் ஸ்ரீரகுராமர் தன் பட்டணம் சென்றார். இனிமையான சொற்களை அறவே கைவிட்டுக் கடுஞ்சொற்களையே பேசிய பரசுராமர் பங்கப்பட்டதையும் துரியோதனன் உடல் பொருள் ஆவியிழந்ததையும் தெரிந்துகொண்டு நாம் எப்போதும் யாவரிடத்தும் இன்சொற்களையே கூறவேண்டும். கடுஞ்சொற்களை மனதினாலும் நினைத்தலுங்கூடாது.

ஒவ்வொருவரும் தங்களிடம் பாராவது இனிமையாகப் பேசாமல் கடுமையாகப் பேசினால் அப்போது அவரவர்கட்கு உண்டாகும் சினம் அவரவர்களே அறிந்து கொள்வார்களே யல்லாமல் நம்மாற் கூற வியலாது. அப்போது இவர்களேன் நம்மிடம் இவ்வளவு கடுமையாகப் பேசுகிறார்கள், இப்படிப் பேசுகிறவர்களை நாம் என்ன செய்தாலுந் தோஷமில்லையென்று நினைக்கிறோம். அப்படியிருக்க நாம் மாத்திர மேன் பிறரிடம் கடுமையாகப் பேசவேண்டும், இது மாத்திரம் நமக்குப் பொருந்தியதோ? பொருந்தியதில்லை. அறியாமையினாற் செய்யுந் தப்பிதமே இது. நாம் ஒருமரத்தில் நிறையச் சிவந்த பழங்களிருக்க ஒரு கனி பழுக்கா திருக்குமானால் அதை

நாம் விரும்புவோமா? விரும்பமாட்டோம். அதுபோலவே நம்மன மென்னும் மரத்தில் பழங்களென்னும் இன்சொற்கள் நிறைந்திருக்க கடுஞ்சொற்களென்னும் காய்களை உபயோகிக்கா திருப்போமாக. இப்பொழுது நாம் தெரிந்து கொண்டோம். இனி இக்காய்களை நாம் கையாடா திருப்போமென்று மிகவும் நிச்சயமாய் நம்புகிறோம்.

ஒருவன் தன் சொந்த நாட்டைவிட்டு அயலூரொன்றைச் சேருகிறான். அவ்வூரில் தனக்கு ஏற்கெனவே தெரிந்த பெரியோர் ஒருவர் அங்கு குடியிருக்கிறார். அவன் அவரைத் தெரிந்து கொள்ள வழியில் நடக்கும் ஒருவனைக்கண்டு "ஐயா, இவ்வூரில்......என்னும பெயர்கொண்ட ஒருவரிருக்கின்றாரா" என்று கேட்குமுன் அவ்வழிப் போக்கன் "அடே வாரய்யா அது மனச்சன் (மனுஷன்) ரொம்ப (நிரம்ப) அவச்சரமா (அவசரமாக) போறான்னு (போகிறானென்று) உனக்குத் தெரியாது. அவன் எங்கேயோ கெடக்கானு அவனை இவனுக்கு இர்ந்து (இருந்து) காட்டிக்கின்னு இருந்தா (காட்டிக் கொண்டிருந்தால்) போதும போய்யாபோ" என்று பதிலுரைப்பதானல் புதிதாய்வந்த மனிதன் என்ன செய்வான் பாவம்! அவன் வழிப்போக்கனைப் பார்த்து, "ஐயா நீர் கோபித்துக் கொள்ளாதீர் நான் வேறே யாரையாயினும் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறே னென்று பதிலுரைத்துவிட்டுப் போகப்போகிறான். இப்புது மனிதன் அவனை வேறென்ன கேட்க முடியும்? ஒன்றும் முடியாது. இவ்விதம் வழிப்போக்கன் (அவசரமாகப் போனவன்) சொன்னதினால் இவனுக்கு ஏதாகிலும் பெருத்த செல்வம் வந்ததோ? ஒன்றும் பிரயோஜனமே இல்லை.

ஒவ்வொருவரும் இனிமைபான சொற்களைப் பேசவேண்டுமானல் சினம் என்னும் பதரை நீக்கி சாந்தம் என்னும் பயிரை வளர்த்தல் வேண்டும். சினத்தைப் பொறுமை வெல்லுமேயல்லாது பொறுமையைச் சினம்வெல்லாது. இதனுல் சினத்தை யொழிக்க வேண்டும். யாவர்க்கும் சினமிருந்தால் இன்சொற்களைப் பேச வொட்டாது தடுக்கும். ஆகையால் சினத்தைத் தலைகாட்டாது ஒழிக்க வேண்டும். சினம் ஒழிய வன்சொல் நீங்கும். பொறுமையுண்டாக இன்சொல் பிறக்கும். உலகத்தில் யாவரும் இன்சொல்லைக் கேட்டு மகிழ்வார்கள். புன்சொல்லைக் கேட்டு இகழ்வார்கள். இதை நோக்கியே,

"இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலாலென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வாலாற்பொங்குங் கடல்." என்று கூறியுள்ளார் பெரியார்.

ஆகையால் பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் இன்சொற்களைக் கூறி இம்மையிற் புகழும் மறுமையில் மோக்ஷமும் அடையவேண்டுமென்று வேண்டுகிறோம்.

புதுவை M. மாணிக்க நாயகர்,
(கலா சிந்தாமணி.)